ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

(லௌகிகர் வைதிகரைக்கண்டு) சாஸ்திரிகளவாள் புதியவருஷம் பிறந்துவிட்டதே, வருஷபலாபலன் எப்படியிருக்கின்றது? ஜோஸியர்கள் என்ன சொல்லுகிறார்கள்?

வைதிகர்:— எல்லாம் நன்றாகத்தானிருக்கின்றதாம்.

லௌகிகர்:— வர்ணாசிரமதர்மத்தின் நிலைமை யெப்படியிருக்குமாமென்று கேழ்க்கிறேன்.

வைதி:— என்ன ஆச்சரியம் முழுவர்ணாசிரமியாய்விட்டீரே! அதன் க்ஷேமத்தை விசாரிக்கவேணுமென்று தங்களுக்கெல்லாம் நல்லபுத்தி வந்துவிட்டதே அதுவே புதுவருஷத்திய சுபபலனைத் தெரிவிக்கின்றது.

லௌகிகர்:— அதற்குள் ஸந்தோஷப்பட்டுவிடவேண்டாம். உங்கள் வைதிகர் கட்டுப்பாடு கலைந்துவிட்டதே. அப்படியிருக்க புதுவருஷத்திய பலன் சுபமென்று எப்படி ஸந்தோஷப்படலாம்.

வைதி:— வைதிகர் கட்டுப்பாடு சாஸ்திரீயமாயுள்ளது ஒருநாளும் கலைந்துவிடமாட்டாது. வைதிகருள்ளும் சிலர் காசாசைபிடித்துக் கண்டதைச் செய்திருக்கலாம். அதனால் வைதிகாசாரத்திற்கு விரோதம் வந்துவிடுமேயென்று பயப்படவேண்டாம், கண்டதைச்செய்யத் தலைப்பட்டவர் இனி நமக்கு இந்த வைதிகமென்ற பெயரும் வேண்டாம். அக்கூட்டத்தோடு ஸஹவாஸமும் வேண்டாமென்று விலகியிருப்பார்கள். அப்படி விலகியவர்களை வைதிகரென்று என் நினைக்கிறீர்கள்?

லௌகி:— பிராம்மணர்களோ நூற்றுக்கு மூன்றுபேர்வீதம்கூட இல்லை. அதிற்சிலர் லௌகிகராய் மற்றவர்களையே பின்பற்றி நிற்கிறார்கள். வைதிகருமிப்படியாய்விட்டால் வார்த்தையிலாவது வர்ணாசிரமதர்மத்தையாதரிப்பவர்கள் குறைவடைகின்றார்களெனின் அதையனுஷ்டிப்பவர் மிகக்குறைவாகிவிடுவார்களே அப்பொழுது தர்மத்தையழிக்கத்தலையெடுத்தவர் கக்ஷி சுலபமாகவே பயனையளித்துவிடும்போலிருக்கிறதே என்று பயமாயிருக்கிறது.

வைதி:— பயப்படவேண்டாம், பகவான் பிரதிக்ஞை செய்திருக்கிறார். "தர்மம் குறைவடையும்போதெல்லாம் அதை நிலைநாட்ட நான் வருகிறேன்" என்று கீதையில் சொன்னது ஞாபகமில்லையா? அதனால் வர்ணாசிரமதர்மத்திற்கு ஒருநாளும் குறைவில்லை. எத்தனைபேர் அதையழிக்கத்தலைப்பட்டாலும் அது அழிபடாது. அழிக்கத் தலையிட்டவர்களை அது அழித்துவிடும். ஆதரித்தவர்களுக்கு அமுது ஊட்டிவிடும். ஸாத்விகர்களையுயர்த்திவிடும். பரதநாட்டுக்கு நன்மையை நாட்டிவிடும் என்ற தைரியத்தோடு இரும். தங்களைப்போல் தங்கள் ஸ்நேஹிதர்களையும் நல்வழிக்கழைத்து நற்புத்திபுகட்டி சிரேயஸ்ஸையடையச் செய்து தாமும் சுகப்படுவீராக. சுபம்.

பத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

சுக்ல-௵ சித்திரை-௴ ௧௨

தூஷித்தால் தோஷந்தான் நேரும்.

இர்ண்டொரு வருஷகாலமாக ஓர்சிலவகுப்பார் ஈசுவரன், தேவர்கள், முனிவர்கள் முதலான ஜகத்வியாபாரத்தை நிர்வாஹம் செய்துவரும் ஸர்வசக்தி, ஸர்வக்ஞத்தன்மை வாய்ந்தவர்கள் ஏற்படுத்திய வர்ணாசிரமதர்மவியவஸ்தையை சுயநலம்பாராட்டும் வெகுசிறுவகுப்பார்கள் சுயநலத்தைக்கருதியே ஏற்படுத்திவிட்டதாகவும், அதனால் நூற்றுக்குத் தொண்ணூற்றேழு ஸங்கியையுள்ள வகுப்பார்களை முன்னேறவிடாமல் கெடுத்துவிட்டதாகவும் அந்த ரஹஸ்யம் சிலநாட்களாக சிலபுத்திமான்களுக்குத் தோன்றியிருப்பதாகவும் அதற்குப் பரிஹாரத்தை அப்படி ஒடுக்கப்பட்ட வகுப்பார் ஒற்றுமையாயிருந்து கூடியசீக்கிரத்தில் தேடிக்கொள்ள வேண்டுமென்பதாகவும் செய்துவரும் சூழ்ச்சிகள் யாவருக்குந் தெரிந்ததே. அதில் அவர்கள் ஸநாதனதர்மிகளிடம் கொண்ட துவேஷம், தங்களைப்போல் தங்கள் முன்னோர்கள் புத்திசாலிகளில்லையென்றுகூட நினைக்கும்படி செய்துவிட்டது. ஸிருஷ்டிகாலந்தொடங்கி இரண்டுவருஷங்களுக்கு முந்தியகாலபரியந்தம் இந்த ஒருசிறுவகுப்பார் செய்துவரும் தீங்குகள் இரண்டுவருஷத்திற்கிப்பால் உண்டானவர்களுக்குத் தோன்றியதுபோல் முன்பிறந்த முன்னோர்களுக்குத் தோன்றவில்லையென்றால் முன்னோர்களைவிட இந்த இரகஸியக்கண்டுபிடித்தவர்கள்தானே பெரியபுத்திசாலிகள்; முன்னோர்களிதைக் கண்டுபிடித்திருந்தார்களானால் இதன் பரிஹாரமேற்படாமலிருக்குமா? ஓதல், ஓதுவித்தல் முதலியன ஒருசிறுவகுப்பாரிடமே பதுங்கிக்கிடக்குமா? ஞானக்கண் கொஞ்சமாவது திரக்காமலிருக்குமா? என்பதாதி பலவாறாகப் பிரஸங்கமேடையில் பஹிரங்கமாகப்பேசிவருகிறார்கள். இவர்கள் கூறுகின்றபடி இருந்திருக்கக்கூடுமா என்பதைச் சற்று ஆலோசிக்கவேண்டும். தனக்குத் தானாகவே கற்பித்துக்கொண்ட தங்

கட்பெருமையைப் புகழ்ந்துகொள்ளுவதிலுள்ள உற்சாஹத்தால் தங்கள் வார்த்தையிலிருந்தே தங்கள் பெரியோர்களுக்கேற்படும் தூஷணையுமிவர்களுக்குத் தோன்றுமல்போயிற்று. பெண்டாட்டியைப் புகழ்வதற்காகப் பெற்ற தாயைப் பட்டியென்று கூறிய கதைபோலிருக்கின்றது. தங்கள் பெற்றோரைப் பெரியவாராக நினைக்காத இவர்கள் மற்றோரையா போற்றுவார்கள். ஆகவே பிறரைத் தூஷிப்பதனாலேயே அன்னாரைத் தாழ்த்திவிட்டதாகவும் தங்களை உயர்த்திவிட்டதாகவும் நினைக்கிறார்கள்போலும். பிறரை தூஷிப்பது பெருமைக்குக்காரணமாம். தங்கள் பெரியோர்களிடத்திலேயே நன்றி பாராட்டாதவர்கள் பிறரைப் பரோபகாரம் செய்தவராகச் சொல்லுவார்களா? இவர் செய்யும் புகழ்ச்சியும் புகழ்ச்சியல்ல. இகழ்ச்சியும் இகழ்ச்சியல்ல. வாய்க்கு வந்ததைப் பேசுகின்றவர் பேச்சுக்குப் பொருள்கிடையாது. வேதம் முதலிய பிரமாண நூல்களை ஸனாதன தர்மிகள் தங்கள் வசமாகவே வைத்துக்கொண்டுவிட்டதாக இவர்கள் கருதுகின்றனர். ஸனாதன தர்மிகள் அப்படியொன்றும் செய்துவிடவில்லை. ஈசுவரஸிருஷ்டியின் அமைப்பே அப்படியிருக்கும்பொழுது இதில் ஸனாதன தர்மிகள் செய்த வேலையென்ன. வீணாக த்வேஷம் பாராட்டித் தோஷமடைகின்றார்களேயன்றி வேறில்லை. ஈசுவரஸிருஷ்டியின் அமைப்பை ஆலோசித்தால் இது நன்கு விளங்கும்.

உதாரணமாக ஒரு சரீரஸிருஷ்டியைப் பார்ப்போம். அதில் ஞானக்கருவிகளான ஐம்புலன்களும் சரீரத்தின் மிகச் சிறுபாகமான கழுத்தின் மேல்பாகத்திலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. அதிகமாயுள்ள கழுத்தின் கீழ்பாகத்தில் ஒன்றுமில்லை. அங்ஙனமமைந்திருப்பதில் கழுத்துக்கு மேல்பாகம்செய்தவேலைத்தனமென்ன? ஆலோசித்துப் பாருங்கள். இதற்காக கைகால் முதலிய கீழ்பட்டவைகள் அஸூயைப்பட்டால் என்ன பயன். கழுத்துக்கு மேல்பாகம் எப்பொழுதுமே உயர்ந்த பதவியிலிருப்பானே நாங்கள்மாத்திரம் சேறு,சகதி,சாக்கடைக்கும்பிகளில் செல்லுவானேன். நாங்கள் இச்சரீரத்தில் அதிகபாகத்தில் பரவி நிற்கின்றோம். மிகக் குறுகியவிடத்திற்கிடக்கும் தலைக்கு இவ்வளவு என்ன ஆதிக்கம் என்பதாதியாகக் கீழேயுள்ள சரீராவயவங்கள் த்வேஷப்படுவதால் அவைகளுக்குத்தான் தோஷமேயன்றி தலைக்கென்ன கெடுதி. கால் முதலியவைகள் கஷ்டப்படுகின்றதேயென்

றுல் அதற்கு நாம் என்ன செய்யலாம். ஸிருஷ்டிகர்த்தாவினிடம் இதைக்கேழ்க்கவேண்டும். கண்ணைப்பேத்துக் காலில் வைத்து விடலாமா ? காதையறுத்துக் கடியில் (இடுப்பில்) கட்டலாமா ? மூக்கையறுத்து முதுகில் பதிக்கலாமா ? நாக்கைத் துண்டித்து நாபிக்குக் கீழ் தொங்கவிடலாமா ? என்ன செய்யலாம். அததன் அமைப்பு அப்படியப்படி ஏற்பட்டிருக்கின்றது என்ற ஸமாதானம்கொள்ளாவிடில்இங்குவேறுவழியில்லை.கால்மாத்திரம்சேற்றில் அமிழ்த்தப்படுவானே. சரீராவயவங்களுள் எல்லாம் ஸமந்தானே தலையைத் தான் என் அமிழ்த்தக்கூடாது என்று ஒரு புத்திமான் ஆலோசித்துத் தலையைச் சேற்றில் அமிழ்த்திவிட்டால் சிறிது நேரம் சென்றபின் கைகால்கள் படும்பாடுதெரியும். ஒரு நாள் முழுவதும் கால் சேற்றிலிருந்தால் சரீரத்திற்கு ஒருகெடுதியும் நேராது. காலில்மாத்திரம் சேற்றுப்புண்வந்தால் வரலாம். அதை எண்ணை முதலியவைகளைப்போட்டு மாற்றிவிடலாம். தலையை ஒருநாழிகையாவது சேற்றில் அமிழ்த்திவிட்டால் உடனே பிராணன்போய் சரீரமே சவமாகிவிடுவது பிரத்தியக்ஷமன்றோ. அன்றியும் கையை வெட்டிவிட்டாலும் ஜீவித்திருப்பதாகக் காண்கிறோம். கால் வெட்டுப்பட்ட நொண்டியும் ஜீவித்திருப்பதாகக் காண்கின்றோம். அதுபோல் தலையறுபட்டவன் பிழைத்திருப்பதைக்கண்டிலேம். இதுபோல இந்த மானிடஉலகத்தை ஒரு சரீரமாக பாவிப்போமாகில் அதில் ஞானக்கருவிகள் மிகச்சிறியவகுப்பாரிடந்தான் அமைக்கப்பட்டிருக்கும். அவை மற்றவரிடமில்லையேயென்றால் எப்படி அவைகளை மற்றவரிடம் வருவிக்கமுடியும்? ஒருவாறு வருவித்தாலும் மூக்கையறுத்து முதுகில் பதித்தது போலாகும். பரலோகஸாதனங்களையல்லவா பிரமாணக்கிரந்தங்கள் போதிக்கின்றன. அதில் எந்தெந்த ஸாதனம் எங்கெங்கு அமைக்கப்பட்டால் பயன்படுமென்பதை ஸர்வக்ஞனான பரமேச்வரன் ஆலோசித்து அமைத்திருக்கிறார். அப்படியிருக்கையில் அதைஉணராது ஏதோ சிலவகுப்புக்காரர் இந்த வியவஸ்தையைக் கற்பித்துவிட்டதாக நினைத்துக்கொண்டு அவர்களிடத்துள்ள துவேஷத்தால் அதை மாற்றிவிடமுயன்றால் மூக்கறுத்த கதையாகத்தான் முடியும். ஒரு சரீரத்திலுள்ள அவயவங்கள் ஒன்றற்கொன்று ஸஹாயமாய்நின்று அததன்வேலையைச் செய்துவந்தாற்றான் சரீரம் சுகமாயிருக்கும். அப்படிக்கில்லாமல் ஒன்றோ

டொன்று பகைத்துக்கொண்டு அதததன் வேலையைச்செய்யாமல் நிறுத்திவிட்டால் சரீரம் கஷ்டப்படும். அன்றியும் அததன் வேலையை அததுதான் செய்யமுடியுமேயல்லாது வேறொன்றின் வேலையை வேறொன்று செய்யமுடியாது. கண்செய்யும்வேலை காதால் செய்யமுடியாதல்லவா? இதுபோலவே கர்மபூமியாகிய நம் பாரத நாட்டில் ஈசுவரஸிருஷ்டியில் யாராருக்கு எந்தெந்த அதிகாரம் அமைக்கப்பட்டதோ அததை அவரவர் செய்து ஒற்றுமையாயிருந்தாற்றான் நம் பாரதநாடு சுகப்படும். அப்படிக்கில்லாவிடில் கஷ்டப்படவேண்டியதுதான். இதைத்தான்கீதையில்ஸ்ரீபகவான்,

"स्वे स्वे कर्मण्यभिरतः" "श्रेयान् स्वधर्मो विगुणः"

'தங்கள் தங்களது கார்யத்தில் அவரவர் ஈடுபடவேண்டும், குணம் குறைந்ததானாலும் ஸ்வதர்மந்தான் சிரேயஸ்கரம்' என்பதாதி பல வசனங்களால் உபதேசிக்கின்றார். இவையெல்லாவற்றையும் பரியாலோசனைசெய்து ஈசுவரனால் ஸிருஷ்டிக்கப்பட்ட ஜகத்தில் உயர்த்தவோ தாழ்த்தவோ அவர்தான் சக்தியுள்ளவரேயன்றி அற்பர்களான மனிதர்கள் ஒருவரையொருவர் உயர்த்திவிடவாவது தாழ்த்திவிடவாவது முடியாது. அப்படி நினைப்பது தவறேயாகும். அதனால் பாரதநாட்டுமக்கள் எல்லோரும் ஒற்றுமையாயிருந்து அவரவருக்கிட்ட வேலையை அவரவர் செய்துகொண்டு அன்யோன்னியம் சிரேயஸ்ஸையடைந்து ஸுகப்படுவார்களாக.

சுபம். ப—ர்.

நாச்சியார்கோயில் லக்ஷ்மீமந்திரம் அபிநவஸரஸ்வதி
குருவர்யவித்வான் ஸ்ரீவாத்ஸ்யஉ-வே கிருஷ்ணமாசார்

சாஸ்திரீய விவாஹமுறை.

(208-வது பக்கத்தொடர்ச்சி.)

கன்னிகை முதன்முதலில் பர்த்தாவாகவரிக்கக்கூடியபுமானை ஆபாதமஸ்தகம் கண்ணாரக்கண்டு கருத்திற்களிகொண்டு தனது கருநெய்தல் மலர்போன்ற குளிர்ந்த நேத்ரகாந்தியைக்கொண்டு அவரது திருமேனியில் பிரகாசிக்கச் செய்யவே அச்சமயம் முதல்

இயற்கை நேசப்பற்றுதலுடன் அஃதோர் மாலை சூட்டியது போலாகிறது.

அதற்கிணங்க அம்மணமகனும் தனக்கு தர்மபத்நியாக ஆகக்கூடிய கன்னிகையைக் குளிரக்கடாக்ஷித்து அவளது அருங் காதல் பொருந்திய நேத்திரகமல மலர்மாலையை அவளுக்குச் சூட்டுகிறான். இவ்வித உட்கருத்தை வெளியிடவே பிறகு அத் தம்பதிமார் புஷ்பமாலையைக் கையிலேந்தி ஒருவருக்கொருவர் திருமார்பில் ஹ்ருதயகமலவாஸியான ஸர்வேசுவரனைப் பூஜித்து ஸாக்ஷியாக்கி எக்காலத்திலும் விட்டுப்பிரியா நட்புடன்விளங்கி வருவதை ஸூசிப்பிக்கும்படி மாலைமாற்றிக் கொள்கின்றனர். இந்த ஸத்ஸம்பிரதாயத்தையும் ப்ரௌடா ஸ்திரீகள் ஆசரிக்க மாட்டார்கள்.

ஔபாஸனம், வைச்வதேவம் யாகம் அதிதிஸத்காரம்,பித்ரு தேவதைகளைப் பூஜித்தல் இதுமுதலிய வைதிககாரியங்களை ஸ்திரீ புமான்களிருவரும் பக்தியுடன் சேர்ந்தே செய்பக்கடமைப்பட்டிருக்கின்றனர்.

ஆகையால் கன்னிகையின் மாதாபிதா இருவரும் கன்யா தான காலத்தில்,

दशानां पूर्वेषां दशानां परेषां आत्मनश्च एकविंशति कुलोत्तारणद्वारा नित्यनिरतिशयानन्द शाश्वत ब्रह्मलोकावाप्त्यर्थं श्री भगवत्प्रीत्यर्थं कन्यादानाख्यमहादानं करिष्ये ।

இப்பெற்றோர்களது முன்பின் பித்ருக்களின் 20-தலைமுறைகளுக்கும் தமக்குமாக 21-தலைமுறை வரையில் ஸம்ரக்ஷிப்பதற்கனுகூலமுள்ள, சாசுவதமாக பிரும்மலோகத்தை அடைந்தானந்திக்கிறதற்காகவும், ஸ்ரீபகவத்ப்ரீதிக்காகவும், கன்னிகாதனம் செய்வதாக ஸங்கல்பித்து தமதருந்தவப்புத்திரியை ஜாதகம், கல்வி, குலம், குணம், அழகு, பொருள், முதலியவை பொருந்திய மாப்பிள்ளையின் கையில் जामाताविष्णुवत्पूज्यः என்றபடி பூஜித்துக் கையைப்பிடித்து உத்தகதாரைபுரஸ்ஸரமாகக் கொடுக்கின்றனர்.

(தொடரும்.)

ஸ்ரீவாத்ஸ்ய உ-வே. கிருஷ்ணமாசார்யர்.

ஓர் வேண்டுகோள்.

விபவ-ஹூ பங்குனி-மீ 8,15உகளில் வெளிவந்த ஸஞ்சிகைகளில் ப்ரும்மஸ்ரீ நீ. வைத்தியநாதசாஸ்திரியார் எழுதிய "கம்பராமாயணம்" என்றதைப்பார்த்தேன். அன்னாருடைய வ்யாஸத்தை முற்றிலும் கூர்ந்துநோக்குகையில் இரண்டுவிஷயங்கள் புலப்படலாயின—ஒன்று யாரோவொரு பிரஸங்கியார்கம்பராமாயணச் சுருக்கத்தின் முடிவில் इत्यार्षे श्रीकम्बरामायणे என்று முடித்தது பிசகென்பது, இரண்டாவது ப்ராம்மணனாய்ப்பிறந்த ஒவ்வொருவனும் ஸம்ஸ்கிருதத்தைத்தவிர மற்ற பாஷைகளைப் பயிலுவதோ அல்லது மற்ற பாஷைகளால் செய்யப்படும் பௌராணிகப்ரஸங்கங்களைக்கேட்டலே கூடாதென்பது.

முதல்விஷயத்தை விவரிப்போம்:—

ஓர் ப்ரஸங்கத்தில் அறியாத ஒருவன் ஆர்ஷம் என்று சொல்லியதற்காக அந்த ராமாயணத்தைப்படித்தல் அல்லது கேட்டல் தகாதென்று சொல்வதழகா? இவர் அன்னாருக்கு நேரிலேனும் கடிதமூலமேனும் ஆர்ஷம் என்று கூறுதல் தவறு என எடுத்துக் காட்டியிருக்கலாம். அவ்வாறு இல்லாமல், கம்பன், தேவனு, ரிஷியா, இல்லை. அவன் ஓர்கவி-கவிகளுக்குக் கேட்போர்மனம் ஸந்தோஷப்படுமாறு கூறுவதொழிய வேறில்லை, எனக்கூறித் தகாத ஓர் விஷயத்தை ஸந்தோஷம் உண்டாகும்வண்ணம் எடுத்துரைத்தல் கவிகளின் இயல்பு எனவும் அபிப்ராயப்படுகிறார். இதில் நான் கூறுவதாவது-கவிகள் அவ்வாறு எதைக்கூறுகிறார்கள்? தர்மத்தையல்லவோ? இனியநடையில், அழகியசொல்லில், செவ்வனே எல்லாருக்கும் புலப்பட, கேட்போர்மனம் குளிர அவர்கள் அதிலேயே ஈடுபடக்கூறுதல் அன்றோ கவிகளின்மரபு இல்லையேல் कान्ता संमिततया அவ்விதகாவ்யங்களுக்கு ஏற்படாதல்லவா? கம்பராமாயணமும் அவ்விதமே செவ்வியநடையில் ராமாயணஸாரத்தை உபதேசிப்பதால் ப்ரமாணமே யாகும், இல்லாவிடில் காளிதாஸன் முதலியவர்களுடைய காவ்யங்களும் ப்ரமாணங்களாகா. இனி இவைகள் ஸம்ஸ்கிருதத்திலுள்ளன ஆகையால் ப்ரமாணம் மற்றதோ அவ்வாறில்லை, ஆனதுபற்றி ப்ரமாணமன்று என உரைத்தாலும் பக்ஷபாதங்காரணமாய்க்கொண்டு கூறுவதாகும். மேலும் காளிதாஸன் முதலியோரது காவ்யங்களும் ப்ரமாணங்களில்லை,

काव्यालापांश्च वर्जयेत् என்பதனால் எனில் அது असत्काव्य विषय மென்று கூறப்பட்டிருக்கின்றது. இன்னும், காவ்யங்களில் விதி நிஷேதரூப தர்மங்கள் போதிக்கப்படவில்லை, ஆனது பற்றி ப்ரமாணமில்லை எனினும் அவைகேட்போனை, படிப் போனை, ஆனந்தத்தில் ஈடுபடச்செய்துகொண்டு வ்யங்க்யமாக அவைகளைப்போதிக்கின்றனவென்பதை மறுக்கவேமுடியாது.

இவ்விதம் கம்பராமாயணம் இல்லைஎனக் கூறமுடியுமா? மற்றும் கம்பன் குறுகியகாலவளவில் இப்பெரிய காவ்யத்தைச் செய்திருப்பதால் அவனுக்கு திவ்யக்ஞானம் இல்லைஎனக்கூறுதல் பொறுத்தமா? அவனுக்கு வால்மீகிமுனிவரிடம் உள்ளமதிப்பும், இராமனிடம் உள்ளபக்தியும், அளவிட முடியாதிருக்கின்றது, இந்நிலையில் இந்தபக்திமானுடைய காவ்யத்தை, இராமனது உண்மையுருவத்தை விளங்கச்செய்யும் காவ்யத்தை, தெற்றென தர்மத்தைப் போதிக்கும் காவ்யத்தை, பிராமணர், அப்ராமணர் முதலிய ஸகலருக்கும் ஏற்றதொரு காவ்யத்தை ப்ரமாணமன்றென்று வரைதல் தகுமோ? ஆகவே பல ஜனங்களாலும் தினே தினே போற்றப்படும் கம்பராமாயணத்தைப் ப்ராமணர் படித்தல் தகாதென்றும், ப்ரமாணமன்றென்றும் ஸகலரும் அறியப்பத்திரிகையில் வெளியிட்டது இதுவே முதலாகுமென நினைக்கிறேன்.

இனி நம் நண்பர்காட்டிய மேற்கோள்கள், ப்ராம்ணன் ஸம்ஸ்க்ருதம் பயிலாமலிருத்தல் கூடாதென்பதைத் தெரிவிக்க வந்த ஸம்ஸ்க்ருத ஸ்துத்யர்த்த வாதமாகும் என்றே கொள்ள வேண்டும். மற்றபாஷைகளை நிந்திக்கவந்ததல்ல. மேலும் நம் நாட்டில் வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களைப் படிக்கையில் (முடியாது பற்றி தர்க்கத்தைத் தவிர்த்து) ஞானமுள்ள மாணவர்களுக்கும், தேச பாஷைமூலமாகவே போதிக்கின்றனர் தேவபாஷை மூலமாகப்போதிக்கும் வழக்கத்தைக்காணவில்லை, இதுஎவ்வாறு சரியாகும்? ஸம்ஸ்க்ருதத்தில் அல்லவோ போதிக்கவேண்டும். அவ்வாறில்லையாதலால் இதைப்படிப்பதும் பொருத்தமேயாகும், இதனால் நான் வால்மீகிராமாயணம் முதலியவற்றைப்படிக்கவேண்டுவதில்லையென்று கூறுவதாகக் கொள்ளக்கூடாது, இதையும் படிக்க வேண்டுமென்பதே என்துணிபு, மேற்கூறிய காரணங்களே-த்யாகய்யர் கீர்த்தனை, கபீர்தாஸ் கீர்த்தனை, முதலியவற்றிற்கும் பொருந்தும் என நினைக்கின்றேன்.

இனிமேல் இரண்டாவது—ப்ராம்மணர்கள் ஒவ்வொருவரும் ஸம்ஸ்கிருதம் பயிலவேண்டுமென்பது நமக்கும் மனமொப்பியவிருப்பமே-ஆனல் த்ருஷ்டபலனேயே பெரிதாகக்கொள்ளும் இந்நாளில் அது எவ்விதம் பலனைத்தரும் என்பதை நிச்சயமாய்க் கூற முடியாது.

தற்கால நிலே.

ஆங்கிலேயர் வந்த இருநூறு ஆண்டுகளுக்குள் அநேகமாயிரமாண்டுகளாக ஸம்ஸ்கிருதத்துக்கு இருந்த பெருமை ஒருங்கே குறையலாயிற்று. இதுமட்டுமோ? நம்மவர்களிற்சிலர் இப்பொழும் ஸம்ஸ்க்ருதத்தால் அன்றே நாம் சிறுமைப்பட்டோமெனச் சில கிரந்தங்களேக்கொளுத்தலாயினர். ஸமீபத்தில் நடந்த செங்கற்பட்டுமஹாநாட்டில் அரசாங்கத்தார் ஸம்ஸ்கிருதத்துக்காகச்செய்யும் செலவை மறுக்கின்றேமென ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர். இவ்விதம் நாமே ஒருவருக்கொருவர் துவேஷித்துக்கொண்டிருத்தல் முறையோ? ப்ராம்மணர் எல்லோருமே ஸம்ஸ்கிருதத்தையே பயில்வதையும் அந்நூல்களேயே ப்ரமாணமாகக் கொள்வதென்பதையும் கைக்கொண்டார்களில்லே. அவர்களிலும் சிலர் தேச பாஷைநூல்களே ப்ரமாணமாகவே கொண்டிருக்கிறர்கள். ஆகையால் இவ்விரண்டையும் வேறுபடுத்தமுடியாது. அவ்வாறு செய்வதும் தீங்காகும், மேலும் ஸம்ஸ்கிருதபாஷையைப் பற்றினமட்டில் (வைதிகநூல்களேத்தவிர) ப்ராம்மணர்களுக்குமட்டும் என்றில்லாது மற்றவர்களுக்கும் கற்க இடந்தரல்வேண்டும், அதாவது த்விஜர்களாகிய க்ஷத்ரிய வைச்யர்களுக்கும், சுமார் இருபதுவருடங்களுக்குமுன் வரை மலேயாளத்தில் ஸகலரும் ஸம்ஸ்கிருதம் பயின்றுவந்தார்கள், இத்தமிழ்தேசத்தில் நாம் அவர்களே உதாஸீனம் செய்தோம், ஆகையினுலேயே நம்மையவர்கள் வெறுக்கின்றனர், அதற்கு நாம்இடமளித்தல் தகாது; பொதுவாய் கொஞ்சமேனும், பிராம்மணர்கள்ஸம்ஸ்கிருதம்பயின்றவர்களாய், மதபக்தி வாய்ந்தவர்களாய், கட்டுப்பாடு உடையவர்களாய் இருக்கின்றனரோவெனின், அதுவுமில்லேயே. இதுபற்றியே நம் "ஆர்யதர்மம்" என்ற பத்திரிகையும், ப்ராமண, அப்ராமணர்களுக்குப்பயன்படுமாறு மததர்மங்களே வெளியிட வந்துளது என்பது எனது எண்ணம், இல்லாவிடில் தமிழில் வாக்காரணமில்லே, முடிவாக ஸம்ஸ்

க்ருதம்கற்க யோக்யதையுடையஒவ்வொருவனும்அதைக்கற்கவும் தேசபாஷைகளையும் உடன்கற்கவும், ஏற்பாடுசெய்யப் பெரியோர் களை யான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

தி. ரா. மஹாலிங்கசர்மா.

ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷித சரிதம்.

(206-வது பக்கத்தொடர்ச்சி.)

அத்தருணத்தில், நவராத்திரிகளில் நியமவிரதங்கொண்ட ஸ்ரீரத்னகேடதீக்ஷிதாள், யாகாக்னியை விதிப்படிவளர்த்து, அவ்வக்கினியில் சந்திரகலாதாரிணியும். தேஜோரூபிணியுமான ஸ்ரீகாமாக்ஷியைத்தியானித்து அர்ச்சிக்கவே, அவ்வக்கினியிலிருந்து அம்பாள் மங்களரூபிணியாய் ஆவிர்ப்பவித்து, குழந்தாய்? வரத்தை வேண்டிக்கொள் என்கவே, இம்மகான் தேவியின் சரணகமலத்தில் விழுந்து, எழுந்து, கைக்கூப்பிக்கொண்டு "அண்டினவர்களுக்கு மங்களமளிக்கும் அன்னையே? எனது கல்வித்திறமையை ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷிதாளிடம், வெளிபிடவேண்டும் அல்லது அவாளாவது என்னை நமஸ்கரிக்கவேண்டும், எனது கீர்த்தி ஆழிசூழ்ந்த பூமியனைத்தும் பாவிநிலைநிற்கவேண்டும். எவ்வாறுவது நான்ஜயம்பெறவேண்டும்" என்றுவேண்டினார்.

அப்போது அம்பாள், "வத்ஸனே? ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷிதாள் பரமசிவாம்சம் பொருந்தினவர் நீயோ எனது அம்சம்நிறைந்தவன் ஆகையால் ஸமயோக்யதையுள்ள பக்தர்களின் விவாதம், தகாததேயாகும், ஆனாலும் உனதுவேண்டுகோளுக்கிணங்கி ஓர் உபாயங்கூறுகிறேன் குல சீலாதிகளால் ஒப்பற்ற மஹாநுபாவரான அம்மஹானுக்கு அவ்விதகுணாதிசயங்கள் பெற்ற உனது கன்னிகையை தானஞ்செய்? அப்போதுவிவாஹகாலத்தில்உன்னை அவர் நமஸ்கரிப்பார். கல்வித்திறமை வயது எனதுபூர்ணாநுக்ரஹம் முதலான பாக்கியம்பெற்ற மாமனானதால் அவரால் போற்றப்பட்டு, குருஸ்தானம் பெற்றவராவாய்" என்றருளி அவ்வக்கினி குண்டத்திலேயே திரோதான மடைந்தாள்.

இவ்விதம் பரதேவதையின் அநுக்கிரஹம்வாய்ந்த இரத்னகேடதீக்ஷிதாள், இல்லாள், கன்னிகை, சிஷ்யர்கள், ஆப்தர்கள்

முதலியவர்களோடு புறப்பட்டு, அச்சமயம் அக்காஞ்சியிலேயே அப்பய்யதீக்ஷிதாள் சிவாராதானஞ் செய்யத்தங்கியிருப்பதைக் கேள்வியுற்று கால்நடையாகவே அவர்களின் வாஸஸ்தலத்திற்குச் சென்றார், அப்போது அப்பய்யதீக்ஷிதாள் ஸ்ரீஏகாம்பரநாதனை தரிசித்துவந்து, கிருஹத்தில்நித்தியமான சிவாராதனஞ்செய்துமுடித்துக்கொண்டிருக்கும்போது, ஸ்ரீநிவாஸதீக்ஷிதாளின் வருகையையறிந்து பரபரப்போடு, அர்க்கியாதிகளை ஸஜ்ஜஞ்செய்துகொண்டு இருந்தார். உடனே ஸ்ரீநிவாஸதீக்ஷிதாள் கிருஹத்தை விசாரித்தறிந்து உள்ளேபுகவே அப்பய்யதீக்ஷிதாள் அர்க்கியபாத்யாதிகளான உபசாரத்தைக் குறைவின்றிநடத்தி அம்மகானை உயர்ந்த ஆஸனத்தில் விஷ்டரத்தை விரித்து அதில்அமரச்செய்தார்.

அப்போது ஸ்ரீநிவாஸதீக்ஷிதாள் அவர்களின் உபசாரத்தையும், முகாரவிந்தத்தில் ஜ்வலிக்கும் பிரும்மவர்ச்சஸத்தையும் கண்டு வியந்து, யோகிகளில் முதன்மையான வத்ஸனே? நான் ஒப்பற்றஉமது புகழைச்செவியுற்று ஆவலோடு இங்குவந்திருக்கிறேன், அறிவாலும் வயதாலும் தவத்தாலும் முதிர்ந்தவனென்றும். தடங்கலில்லாமல் விஷயங்களை எடுத்துரைப்பேனென்றும் வித்வான்கள் என்னைக்கூறுவதுண்டு, அஃதிருக்கட்டும், எவர் சிவஞ் ஞானம் பெற்றவரோ அவரிடத்தில் எப்பொருளையுமளிக்கவேண்டும் என்ற சாஸ்திரக்கருத்தை நீயுமறிவாய், ஆகையால் ஓர் வரர்த்தைசொல்கிறேன் அதையேற்றுக்கொள்ளவேண்டும், குசலத்தை நாடுகின்ற எந்த அறிவாளியும், அமிருதத்துக்கொப்பான எனது மொழியை மறுக்க வல்லவனல்லன், ஆகையால், எனது கன்னிகையான மங்களநாயகியை ப்பாணிக்கிரஹணஞ் செய்துகொள் அதனால் இம்மை மறுமையிலாகிய இன்பங்களையும் கீர்த்தியையும், பெறுவாய்என்று மொழிந்து பதில்மொழியைஎதிர்பார்த்திருந்தார்

10. விவாஹம்.

இவ்வாறு அமிழ்தத்தினும் இனிய அம்மஹானின் மங்களமொழியைச்செவியுற்று அவர்களின் கருத்திற்கிசைந்த அப்பய்ய தீக்ஷிதாள் மந்தஹாஸம்செய்து கம்பீரமான பொருள்பெற்ற மறுமொழியையுரைக்கத்தொடங்கினர்.

பெரியோரே! இஃதிருக்கட்டும், உமது மஹிமையை யானுமறிவேன், பண்டிதமணிகள் நிறைந்த மஹாராஜனின் ஸபையில்

தவறின வார்த்தையையும் பொருள்பெறும்படி ஸமர்த்தனஞ் செய்தவர்களன்றோ தாங்கள்? யாதொரு காரணத்தால் பரதேவதையின் அநுக்கிரஹத்தால் அமாவாஸ்யையின் இரவையும் பூர்ண சந்திரனுடைய பிரகாசம்நிறைந்த பௌர்ணமியாகச் செய்து யோகஸித்தி பெற்றவரின் மஹிமை தங்களால் வெளியிடப்பட்டதோ, மேலும் தாங்கள் இம்மோக்ஷபுரியான ஸ்ரீகாஞ்சிமாநகரையடைந்து கொடூரமான நியமத்தோடு யாகாக்னியில் பரதேவதையை தியானித்து அர்ச்சித்து ஸாக்ஷாத்கரித்துப்பேசியதையும் அறிவேன். சமத்காரவார்த்தைகளால் என்ன? க்ஷேமத்தை விரும்புகின்ற பெரியோர்கள் யாவருமே வணங்கத் தக்கவர்கள். பாலையின் ஆக்ஞையால் இந்த உமது பாலையும் பாணிக்கிரஹணஞ் செய்துகொள்ளத்தக்கவளே என்று அம் மஹான் கருத்துக்கிசைந்து மௌனம் ஸாதித்தார்.

உடனே அவ்விருவரும் சேர்ந்து சுபமுகூர்த்தத்தை பெரியோர்மூலமாய் நிச்சயித்து ஆப்தவர்க்கங்களுக்குக் கல்யாணச் செய்தியனுப்பினர். அப்போது ஸமஸம்பந்தமென்று கொண்டாடி பந்துக்கள் மித்திரர் வித்வான்கள் மஹாராஜாக்களாகிய யாவரும் அக்கல்யாணத்தைச்சிறப்பிக்க அக்காஞ்சியிலேயே ஒன்றுகூடினர். அப்போது कन्यां कनकसंपन्नां என்றபடி கன்னிகையை ஸுவர்ணாபரணங்களால் அலங்கரித்து ஸ்ரீநிவாஸதீக்ஷிதர் ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷிதருக்குக்கன்யாதானஞ்செய்தார். விதிவழுவாது அவ்விவாஹம் சிறப்பாய் நடைபெற்றது. இருவரும் அவதாரபுருஷர்களானதாலே மஹாராஜாக்களே பொறுப்பாயிருந்து விமர்சையாய் நடத்திப்போநந்தங்கொண்டு பெரியோரால் ஆசீர்வதிக்கப்பட்டனர். அந்த விவாஹத்தில் ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷிதரின் அன்னதானம், பூரிதானம் முதலானவைபவங்களை அக்காலத்துக் கவிமணிகள் வரைந்திருக்கின்றனர். அவைகளில் இங்கு ஒரு சுலோகத்தை வெளியிடுகிறேன்,

अप्पय्य यज्वन्यवनीसुराणां अन्नं सुवर्णं सरसं दधाने ।
अपर्णमासीत्कदलीतरूणां न केवलं वृन्दमपि द्विजानाम् ॥

ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷிதர் அறுசுவை பொருந்தின அன்னத்தையும் ஸ்வர்ணத்தையும் பிராம்மணர்களுக்கு ஆதரவுடன் அளிக்

கும்போது வாழைத்தோட்டம்மட்டிலும் (अपर्ण) இலையற்றதாக ஆகவில்லை, ஆனாலோ பிராம்மணஸமூஹமும் (अपगत) இல்லாத (ऋण) கடனையுடையதாக ஆயிற்று.

பிராம்மணர்கள் புஜிப்பதற்காக விஸ்தாரமான வாழையிலைகள் செலவழிக்கப்படுவதால் வாழைத்தோட்டத்தில் இலை கிடைப்பது எப்படி அறிதாயிற்றோ அப்படியே தனது பந்துக்கள் அயலார்கள் முதலாகிய எனையோரிடமும் அளவுகிடந்த ஸ்வர்ணரூபமான தனங்கள் கொடுத்ததாலே அவரவர்களின் கடன்களும் நீங்கும்படியாயிற்று என்று அச்செய்யுளின் கருத்து.

அச்சிறப்பான விவாஹத்தில் ஸ்ரீநிவாஸதீக்ஷிதாள் வாணைப் பூஜித்து கன்யாதானஞ்செய்ததும் மாமனாகிய அத்தேவிபக்த சிகாமணியை அப்பய்யதீக்ஷிதாளும் நமஸ்கரித்தார். அம்மஹானும் தம்பதிகளை ஆசீர்வதித்தார், இக்கல்யாணவைபவம் எங்கும் பாவிற்று, அம்மஹான்களுடைய கீர்த்தியும் கிராமங்கள், நகரங்கள், ராஜ்யங்கள் எங்கும் பரவலாயிற்று.

பிறகு ஜாமாதாவான அப்பய்யதீக்ஷிதாளிடம் அம்மஹான் விடைபெற்று ராஜாக்களால் கொடுக்கப்பட்ட பல்லக்குமுதலான பிருதுகளோடு தனது தூப்பில் (शूरसेन) என்ற தனது அபிஜன கிராமத்துக்குச்சென்றார்.

11. ஸ்ரீநிவாஸதீக்ஷிதாளியற்றிய நூல்கள்.

இம்மஹானியற்றிய ஸம்ஸ்கிருத கிரந்தங்கள் அளவுகடந்தவை. தெரிந்த சில நூற்களையும் அதற்கு ஆதாரத்தையும் எழுதுகிறேன். 1 சிதிகண்டவிஜயகாவ்யம், 2. பாவநாபுருஷோத்தம நாடகம், 3 அத்வைதாஸ்ரவகௌஸ்துபம், 4. வாததாராவளி, 5. மத்வத்வம்ஸனம், 6. பௌத்ததந்திரமதனம், 7. வேதாந்த வாதாவளி, 8 மணிதர்ப்பணம், 9. ஸமயஸர்வஸ்வம், 10. விதிநிர்ணயம், 11. இரத்தினதீபம் முதலியவை.

பாவனாபுருஷோத்தமம் முதலான நாடகங்கள் 28.

சிதிகண்டவிஜயம் முதலான காவ்யங்கள் 60.

த்வனிப்பிரதானங்களான ஸாஹித்யஸஞ்ஜீவினி, பாவோத்பேதாஸாஸ்ரவம் முதலான நூற்கள் கணக்கற்றவை, தேன்ரஸம்

ததும்பும் அழகிய சிறு காவ்யங்கள் பல. அப்படியே சந்தஸ், ஜ்யோதிஷம், மந்திரம், தந்திரம் இவைகளையறிவிக்கும் நூற்கள் பிராகிருத கிரந்தங்கள், ஸகலாகமஸித்தாந்தங்கள் நிறைந்த இனியமொழிகளால் தொடுக்கப்பட்டவைகளும், ஆறுசாஸ்திரங்களின் ஸகல மர்மங்களையும் பகுத்தறிவிக்கின்றவைகளுமான மற்றும் பல கிரந்தங்கள்

अद्वैतास्त्रकौस्तुभं व्यरचयद्यो वादतारावळिं
ध्वध्वंसन बौद्धतन्त्रमथने वेदान्तवादावळीन् ।
प्रख्यातं मणिदर्पणं समयसर्वस्वं विधेर्निर्णयं
तत्त्वानां परिशुद्धिबोधविमलं रत्नप्रदीपं स्मृतेः ॥

यो भावनापुरुषवर्यमुखान्यकार्षीत्
अष्टादशापि च दशाद्भुतरूपकाणि ।
भावोत्तराणि शितिकण्ठजयादिमानि
काव्यानि षष्टिमतनोत् अमृतायितानि ॥

ध्वन्य ध्वन्य मनोविनोदनिपुणाः साहित्यसंजीविनी
भावोद्भेदरसास्त्रवादिकृतयः पारेशतं यत्कृताः ।
अन्ये क्षौद्ररसार्द्रसुन्दरगिरः क्षुद्रप्रबन्धाः शतं
छन्दोज्यौतिष मन्त्रतन्त्रविषया भाषाप्रबन्धास्तथा ॥

अन्याश्च यस्य कृतयो निखिलागमान्त
सिद्धान्ततान्तर निरन्तरसूक्ति गुम्भाः ।
षड्दर्शिनी सकलमर्मविवेककर्ष
कर्पक्षमाः सुकृतिनां मुदमावहन्ति ॥

இந்தப்பிரமாண ச்லோகங்களால் கீழ்கண்ட நூல்களின் விவரங்கள் தெரிகின்றன.

ஸ்ரீபலஸ்வாமி பட்டர்என்ற பாஷ்யகாரன் தொடங்கி ஸ்ரீநிவாஸதீக்ஷிதாள் ஆறுவது பரம்பரையென்று இம்மஹானின் குமாரான ராஜசூடாமணிதீக்ஷிதாளின் ருக்மிணீபரிணய காவ்யத்தின் உரையாரம்பத்தில் கூறப்பட்டிருக்கிறது.

12- அப்பய்யதீக்ஷிதாளின் கீர்த்தி.

இனி நமது சரித்திரநாயகரான ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷிதாளின் மஹிமையை வரையத்தொடங்குவாம். இவ்வாறு நமது தீக்ஷிதாள் மங்களநாயகியை மணந்து அப்பெண்மணியோடுகூட இல்லற தர்மத்தை விதிவழுவாது நடத்திக்கொண்டும், ஸகலசாஸ்திரங்களேயும் சிஷ்யர்களுக்குப் போதித்துக்கொண்டும், தாம் அனுட்டிப்பதாலேயே வர்ணாசிரம தர்மங்களை ஏனையோரும் குறைவறச்செய்யும்படி தூண்டிக்கொண்டும், ஸகலசாஸ்திரங்களின் மர்மங்களைத் தெளிவுறப் புகட்டும் நூற்களேயியற்றிப்பரவச் செய்துகொண்டும், அடையப்பலம் என்ற அபிஜனகிராமத்திலேயே வாழ்நாட்களை அதிகமாய்க்கழித்தபோதிலும், லோகானுக்கிரஹார்த்தமாகவே, தஞ்சை, வேலூர், முதலான ராஜ்யங்களில் அரசர்களால் வேண்டிக்கொள்ளப்பட்டு சிற்சில சமயங்கள் அங்கங்கு வஸித்துக்கொண்டும் இருந்தார். அக்காலத்தில் இம்மஹானுக்கு வேண்டிய அளவிறந்த தனங்களைத் தந்து உபகரித்தவர்களில் தஞ்சை, நாஸிம்மராஜனும், வேலூர் சின்னபொம்மராஜனும் முக்கியமானவர்கள்.

இவ்விதம் தீட்சிதாளின் ச்ரௌதஸ்மார்த்த கன்மானுஷ்டானம், பாடப்ரவசனம், நூலியற்றுதல், சிவாராதனம், பரோபகாரம், சிவவிஷ்ணுக்களிடம் அபேதபுத்தி புத்தி முதலிய நற்குணங்களால் பரவின கீர்த்தி ஆஸேது ஹிமாசலம், பிரகாசித்தது. அப்போது அக்கீர்த்தியைக் கேட்டவர்களும், உத்தரதேசத்துப் பண்டிதர்களுமான ஸார்வபௌம கவிமுதலானவர்கள் ஸேதுயாத்திரையென்ற வியாஜத்தால் பயணப்பட்டு தட்சிணதேசமடைந்து தீட்சிதாளையணுகித் தங்களுக்கு எந்த சாஸ்திரத்தில் பாண்டியத்தியமுண்டு என்று கேட்டனர். அப்போது நமது தீட்சிதாள் ஒரு சாஸ்திரமுமறியேன் என்ற கருத்தைக்கொண்ட ஒரு சுலோகத்தின் ரசனையினாலேயே தான் வையாகரணர் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளச் செய்தார். அதாவது,

नाहमधीती वेदे न च पठिती यत्रकुत्रचिच्छास्त्रे ।
किन्तु दरेन्दु वतंसिनि पुरहिंसिनि पुंसि भूयसी भक्तिः ॥

நான் வேதத்தில் அத்யயனஞ் செய்தவனல்லன். ஒரு சாஸ்திரத்திலும் படித்தவனுமல்லன். ஆனலோ இளஞ்சந்திரனைச் சிரோ

பூஷணமாகக் கொண்ட திரிபுரஸம்ஹாரியான பரமேசுவானிடம் அதிகபக்தியுள்ளவன் என்று இச்செய்யுளின் கருத்து. இங்கு **वेदे अधीती-- शास्त्रे पठिती** என்ற ஸப்தமீ பிரயோகத்தாலும், **भूयसी भक्तिः** பகுவ்ரீஹிப் பிரயோகத்தாலும் அதற்கிலக்கணமான **क्तस्येन्विषयस्य कर्मण्युपसंख्यानम्** என்ற வார்த்திகமும், **स्त्रियाः पुंवद्भाषितपुंस्कादनूङ् समानाधिकरणे स्त्रियामपूरणी प्रियादिषु** என்ற பாணினி ஸூத்திரமும் ஞாபகப்படுத்தப்பட்டன. இவைகளோடு மட்டுமல்லாமல்.

கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவன்
நற்றாடொழா அரெனெனின்.

समस्तशास्त्रचिन्तनैरहर्निशं च किं फलम् ।
महेशपादवन्दनं हृदापि नातनोतिचेत् ॥

என்றதிருக்குறளின் கருத்துக்கொப்ப சாஸ்திரயுணர்ச்சியின் பயன் ஈச்வரபக்தியே என்பதும் வெளிக்காட்டப்பட்டது.

भक्ति சப்தம், ப்ரியாதி கணத்தில்படிக்கப்பட்டதாலே, **भूयसी भक्तिः** என்றவிடத்தில் **भूयसी** பதத்திற்குபும்வத்பாவம் ஏற்படவில்லை, உடனே அம்மஹானின் வியாகரண சாஸ்திர நுட்பஞ் ஞானத்தையும் சிவபக்தியையுமுணர்ந்த ஸார்வபௌம கவி ஸ்துதி பண்ணின இரண்டுச்லோகங்களில் எனக்குக்கிடைத்த Manuscript இல் ஒன்றுஎழுத்துப் புரியாதஸ்திதியில் இருப்பதால் மற்ற ஒன்றை இங்குஎழுதுகிறேன்.

बद्धस्पर्धान्धविद्वत्प्रमुखमुखपुटी मुद्रणोन्निद्रमेधा
शक्तिं स्वामप्ययज्वन् कथय कथमिव द्रोग्धुमन्येप्रगल्भाः ।
क्रीडाचञ्चच्चपेटा हतकरटिघटाकुम्भकूटाधिरूढ-
प्रौढाटोपाय मूढाः किमुमृगपतये रोहिता द्रोहितारः ॥

பொருமைகொண்ட மற்ற கற்றவரின் அகத்தை மூடச்செய்வதில் விழிப்புள்ள ஸமயோசித புத்தி சக்தியைப் புதிது புதிதாகப் படைக்கும் வல்லமைவாய்ந்த அப்பய்யயஜ்வரோ? மற்றவர் உம்மை விரோதிக்க எங்ஙனம் வல்லவராவர் விளையாட்டு அறையாலேயே மாய்க்கப்பட்ட யானைக்கூட்டத்தின் மஸ்தகத்தில்பாய்ந்த கேஸரியினிடம் மற்ற க்ஷுத்திரமிருகங்கள் பகைக்குமா என்ன?

(தொடரும்.) K. V. சுப்பிரமணியசாஸ்திரி,